14.10.2024



<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>

<u>அசல் வழக்கு எண்.3/2010</u>

<u>பி.வா.சா. 1–திருப்பதி (எ) திருநிறைச்செல்வன் த/பெ.தர்லிமங்கம்</u>

<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அசல் 1ம் வாதி கிருஷ்ணன் செட்டியை எனக்கு தெரியும். அவருடன் உடன் பிறந்தவர்கள் மொத்தம் 3 பேர். கிருஷ்ணன், ராமசாமி, வெள்ளையன் ஆகியோர்கள் ஆவார்கள். மேற்கண்ட மூவரும் அவருடைய குடும்ப சொத்தை1978ம் வருடத்தில் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரித்ததில் கிருஷ்ணனுக்கு வடபுறம் கோடி, அதற்கு தென்புரம் ராமசாமி, அதற்கு தென்புரம் வெள்ளையன் என்பவருக்கும் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட ஒவ்வொருவருக்கும் தலா 22 செண்ட்டுகள் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட சொத்துக்களுக்கு மேற்க்கே ஆதியில் பாப்பம்மாள் சொத்து, அந்த சொத்தை மேற்கண்ட அண்ணன் தம்பி மூவரும் குழந்தை வேலுவிடம் வா.சா.ஆ.3 மூலம் கிரையம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தின் நகலைத்தான் நான் படித்து பார்த்துள்ளேன். குழந்தைவேலுவிடமிருந்து கிரையம் பெற்ற சொத்திற்கு

மேற்கே ஒரு ஏரிவாய்க்கால் செல்கிறது என்றால் சரிதான். ஏரிவாய்க்காலில் கிழக்கே தண்ணீர் செல்வதற்கு ஒரு பலகையால் தடுப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான்.

2. தென்வடல் ஏரிவாய்க்காலில் மடையை அடைத்தால் கிழக்கே ஏரிவாய்க்கால் தண்ணீர் செல்லும் என்று சொன்னால் சரிதான். மண்சாலைக்கு கிழக்கே தெற்கு வடக்காக மேற்க்கண்ட ஏரிவாய்க்கால் செல்கிறது என்று சொன்னால் சரிதான். குழந்தைவேலுவிடமிருந்து கிரையம் வாங்கியதற்கு வடபுறமும், கிருஷ்ணன் வகையறா பாகத்திற்கு வடபுரமும் கிழமேல் ஏரிவாய்க்கால் செல்கிறது என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட கிழமேல் வாய்க்கால் வெகுதூரமாக செல்கிறது என்றால் சரிதான். மேற்கண்ட ஏரிவாய்க்கால் அரசு வாய்க்கால் என்றால் சரிதான். கிருஷ்ணன், ராமசாமி, வெள்ளையன் ஆகியோர்கள் பிரித்து கொண்ட சொத்தில் மேற்க்கே பொதுவாய்க்கால் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான்.

3. வெள்ளையனுக்கு பிரித்த சொத்திற்க தண்ணீர் செல்ல வேண்டும் என்றால் கிருஷ்ணன், ராமசாமி ஆகீயோர்கள் நிலத்தில் உள்ள வாய்க்கால் வழியாக தண்ணீர் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அதேபோல் ராமசாமி நிலத்திற்கு தண்ணீர் செல்லவேண்டும் என்றால் கிருஷ்னின் நிலத்தில் உள்ள வாய்க்காலில் தண்ணீர் சென்றால் மட்டும் போதும் என்றால் சரிதான். மேற்கண்ட மூவர் நிலத்திற்கும்

மேற்க்கே உள்ள வாய்க்கால் பாகம் பிரிப்பதற்கு முன்பே இருந்ததா என்று எனக்கு தெரியாது. கிருஷ்ணன், ராமசாமி, வெள்ளையன் ஆகியோர்கள் அவர்கள் பட்டா நிலத்தில் அமைத்துக்கொண்ட பொது வாய்க்கால் தான். மேற்கண்ட மூவரும் பாகம் பிரிக்கும் போது வாய்க்காலுக்கு என்று நிலத்தை ஒதுக்காமல் அவரவருக்கு ஒதுக்கிய நிலத்தில் தான் வாய்க்கால் அமைத்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

4. 1978 ம் ஆண்டு அவர்கள் பாகம் பிரித்து கொண்டபிறகுதான் அந்த நிலத்திற்கு மேற்க்கே உள்ள குழந்தைவேலு நிலத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். குழந்தைவேலுவிடம் கிரையம் பெற்ற சொத்தை கிருஷ்ணன் வகையறா மூவரும் வாய்க்காரராக பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட நிலமானது வாய்க்காலுக்கு கிழக்கே உள்ள பாகம் பிரிக்கப்பட்ட சொத்தில் யாரருக்கு எந்த வரிசை அடிப்படையில் கிடைக்கப்பெற்றதோ அதற்க எதிராக அவரவர்கள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். குழந்தைவேலுவிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்தில் ஒரு கிணறு உள்ளது. அந்த கிணற்றில் கிருஷ்ணன் வகையறாவிற்கு 1/3 பங்கு உள்ளது. மீதி பங்கு குழந்தைவேலுவிற்கு உள்ளது. குழந்தைவேலுவிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்தில் வெள்ளையன் பாகத்தையும், அவருக்கு குடும்ப பாகம் மூலம் கிடைத்த

14.10.2024



பாகத்தையும் ராமசாமிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

5. மேற்கண்ட ராமசாமி குழந்தைவேலுவிடம் இருந்து பெற்ற சொத்தில் உள்ள பங்கினையும் அவருடைய குடும்பத்தின் மூலம் கிடைத்த சொத்தினையும், வெள்ளையன் வாரிசாரிடமிருந்து பெற்ற சொத்தையும் உங்கள் தகப்பானருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 வரைபடத்தில் A, A1, A2 என காட்டப்பட்டுள்ள வாய்க்காலில் வெள்ளையன், ராமசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் A, A1, A2 வாய்க்காலின் அகலம் பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால் சாட்சி வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தை பார்த்துவிட்டு படிக்கமுடியவில்லை என்றும் கண்ணாடி அணிந்தால் சொல்லமுடியும் என்றும் கூறுகிறார். வா.சா.ஆ.4 பத்திரத்தில் A, A1, A2 வாய்க்கால் அகலம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். அந்த ஆவணத்தில் A, A1, A2 வாய்க்காலின் அகலம் பற்றி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் கண்ணாடி இல்லாததால் படிக்கமுடியவில்லை என்று கூறுகிறார்.

6. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் வெள்ளையன், ராமசாமி வகையறா என் தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான்.

14.10.2024



மேற்கண்ட வா.சா.ஆ.5 ஆவணத்தில் A, A1, A2 வாய்க்கால் எத்தனை அடி அகலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி வா.சா.ஆ.5 ஆவணத்தை படித்து பார்த்தார். படித்து பார்த்துவிட்டு 2 ½ அடி அகலம் என்று கூறுகிறார். மேற்கண்ட ஆவணத்தை படித்து பார்த்துதான் கூறுகிறேன். (சாட்சி மேற்கண்ட வா.சா.ஆ.5 ஆவணத்தை படித்து பார்த்துதான் சாட்சியம் அளித்தார். ஆனால் வா.சா.ஆ.4 ஆவணத்தை படித்து பார்ப்பதற்கு கண்ணாடி தேவை என்று கூறினார். எனவே மேற்க்கண்ட சாட்சி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது எவ்வாறு நடந்துகொண்டார் என்பதை உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 12 ன் படி குறிப்பு பதிவுசெய்யப்படுகிறது). தற்போது வா.சா.ஆ.4 ஐ பார்த்துவிட்டு சாட்சி A, A1, A2 வாய்க்காலின் அகலம் குறிப்பிடவில்லை என்று சாட்சி கூறுகிறார். A, A1, A2 பொதுவாய்க்கால் வெள்ளையன் பாகம் வரைதான் அந்த பொதுவாய்க்கால். மேற்கண்ட வாய்க்கால் மூலம் வெள்ளையனுக்கு 22 செண்ட், ராமசாமிக்கு 22 செண்ட் என மொத்தம் 44 செண்டிற்காக ஏற்பட்ட வாய்க்கால் என்று சொன்னால் சரிதான்.

7. மேற்கண்ட வாய்கால் அகலம் 1 ½ அடிதான் என்றும் நீங்கள் 2 ½ அடி என்று பொய்யாக சாட்சி அளிக்கீறிர்கள் என்று சொன்னால் சரியல்ல. மூலப்பத்திரத்தில்

14.10.2024



காணாத பொதுவாய்க்காலின் அகலத்தை உங்கள் தகப்பனார் 2 அடி என்று காண்பித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. ராமசாமியின் நடுப்பங்கில் மேற்க்கண்ட வாய்க்கால் உள்ளதா என்றால் உள்ளது. கிருஷ்ணன் நிலத்திலும் அந்த வாய்க்கால் உள்ளது. கிருஷ்ணன் நிலத்தில் உள்ள வாய்க்கால் பொருத்து பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையம் சென்றீர்களா என்றால் ஆமாம். அவர் வாய்க்காலை அழித்துவிட்டதாக சொல்லி காவல் நிலையம் சென்றீர்களா என்றால் இல்லை. அவர் தண்ணீர் விடவில்லை என்பதால் காவல் நிலையம் சென்றேன். கிணற்றிற்கு பாதை எங்கு உள்ளது என்றால் ஏரிவாய்க்காலை கடந்தால் கிணறு, எனவே பாதை தேவையில்லை. குழந்தைவேலுவிடமிருந்து கிருஷ்ணன் வகையறா கிரையம் பெற்ற ஆவணத்தில் கிணறுக்கு பாதை எந்தபக்கம் என்று காண்பிக்கப்படவில்லை. வா.சா.ஆ.3 ல் கிணற்றுமேட்டிற்கு தென்புரம் 5 அடி அகலமுள்ள பாதை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

8. கிணற்று மேட்டிற்கு தென்புரம் உள்ள சொத்து என் தகப்பனார் ராமசாமியிடமிருந்து என் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்து. கிணற்றிற்கு தென்புரம் உள்ள 5 அடி பாதைக்கு தென்புரம் உள்ள ராமசாமி நிலத்தை உங்கள் தகப்பனார் கிரையம் வாங்கியதால் பாதையை சேர்த்து உழுதுவிட்டீர்கள் என்றும்.

எனவே அந்த பாதையை வாதிக்கு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மூலஆதரவு பத்திரத்தில் உள்ள பாதையை அழித்துவிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் போது பாதை இல்லை என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணன், ராமசாமி, வெள்ளையன், ஆகியோர்கள் குடும்ப பாகநிலத்திற்கு கிழக்கே தென்வடல் வாய்க்கால் செல்கிறது என்றால் சரிதான். அந்த வாய்க்கால் ஏரிவாய்க்கால் என்று சொன்னால் எனக்கு தெரியாது. அந்த வாய்க்காலில் இருந்து தண்ணீர் வந்தால் மேற்கண்ட கிருஷ்ணன் வகையறா குடும்ப பாகசொத்திற்கு தண்ணீர் ஏராது என்றால் சரிதான். அந்த வாய்க்கால் தெற்கே உள்ள கிழமேல் ரோட்டை தாண்டி செல்கிறது.

9. மேற்கண்ட வாய்காலுக்கு அதற்கு வடக்கே கிழமேலாக வரும் வாய்க்கால் வழியாகத்தான் தண்ணீர் வரும் என்றால் சரிதான். பச்சைவண்ணமிட்ட கிழமேல் வாய்க்கால் வழியாக தண்ணீர் செல்லவேண்டும் என்றால் தென்வடல் ஏரிவாய்காலில் மடை அமைத்தால் தண்ணீர் செல்லும் என்றால் செல்லும். அதேபோல் கிழமேல் வாய்க்காலில் மடை வைத்தால் போகும் என்கிறீர்களோ அதேபோல் தென்வடல் ஏரிவாய்க்காலில் நீங்கள் ராமசாமி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற சொத்திற்கு தண்ணீர் செல்லும் என்றால் சரியல்ல. வாய்க்கால்

பள்ளம். வயல் மேடு. பச்சைவண்ணமிட்ட வாய்க்கால் ஏரிவாய்க்காலை விட மட்டமாக உள்ளதாக சாட்சி கூறுகிறார். எனவே மடை வைத்தால் தண்ணீர் செல்வதாக கூறுகிறார். ஏரிவாய்கால் போகபோக பள்ளத்தில் செல்கிறது. நிலம் மேட்டில் உள்ளது. எனவே தண்ணீர் செல்லாது என்று நான் கூறுகிறேன். உங்கள் நிலத்திற்கு நேரே மடை வைத்தால் தண்ணீர் செல்லும் என்றால் சரியல்ல. தண்ணீர் செல்லாது. கிருஷ்ணன் வகையறா பொதுவாக ஏற்படுத்திக்கொண்ட வாய்க்கால் கைமாறி விட்டதால் புழக்க உரிமை உங்களுக்கு இல்லை என்று வாதி கூறுகிறார் என்று சொன்னால் சரியல்ல. அந்த வாய்க்கால் கிருஷ்ணன் குடும்பத்தில் ஏற்பட்ட பாகத்திற்காக, வசதியுரிமைக்காக ஏற்பட்ட வாய்க்கால் என்று சொன்னால் சரியல்ல.

10. பச்சைவண்ணமிட்ட வாய்க்காலுக்கு வடக்கே கொஞ்சம் தூரம் தள்ளி எனக்கு நிலம் உள்ளது. அந்த நிலத்திலுருந்து பி.வி.சி குழாய் மூலம் ராமசாமி என் தகப்பானருக்கு எழுதிக்கொடுத்த சொத்திற்கு தண்ணீர் எடுத்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்கண்ட பி.வி.சி குழாணை ஏரிவாய்க்காலுக்கு அடியில் பதித்து தண்ணீர் எடுத்துவருகிறேன். மேற்கண்ட வாய்க்காலை விட உங்கள் நிலம் மேடாக உள்ள நிலையில் எவ்வாறு தண்ணீர் வருகிறது என்றால் மோட்டாரில் உள்ள அழுத்தத்தினால் தண்ணீர் வருவதாக சாட்சி கூறுகிறார். என் நிலத்திற்கு மேற்கே

14.10.2024



உள்ள ஏரிவாய்க்கால் மூலம் 10 ஏக்கருக்கு தண்ணீர் பாய்ந்து உபரிநீர் ஐயாற்றிக்கு சென்றுவிடும். மேற்கண்ட ஏரிவாய்காலில் வருகின்ற தண்ணீரும் அழுத்தத்துடன் வருவதால் தான் 10 ஏக்கர் நிலத்திற்கும், ஐயாற்றிற்கும் தண்ணீர் செல்கிறது என்றால் சரியல்ல. A, A1, A2 வாய்காலில் புழக்க உரிமை அடிப்டையில் உங்களுக்கு பாசன உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதே ஏரிவாய்காலில் இருந்து தண்ணீர் எடுத்து செல்வதற்க வசதி உள்ளதால் உங்களுக்கு புழக்க உரிமை அற்றுபோய்விட்டது என்று சொன்னால் சரியல்ல. கிணற்றிற்கு தென்புரம் 5 அடி அகலமுள்ள பாதை உள்ளது என்றும், அதை உங்கள் தகப்பனார் அழித்துவிட்டார். அந்த பாதை வாதிக்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த பாதையை சீரமைத்து கொடுக்க நீங்கள் கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.